**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.842/2022**

**Deposition of LW-2/PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மகமாயி | **Age** | : | 75/2026 |
| **Husband's Name** | : | திரு. மாயாண்டி | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | வீட்டுக்குடித்தனம் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11/06/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண் 394/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3). சம்பவம் நடந்த தேதி,நேரம் தெரியுமா என்றால் சம்பவம் நடந்து மூன்று வருடம் ஆகிவிட்டது அதனால் ஞாபகம் இல்லை. தொக்கம் எடுத்தது பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே விபத்து நடந்தது புது பஸ் ஸ்டாண்ட் அருகே. நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். என் பேரன் கொடுத்த புகாரில் எனது பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் பதட்டத்தில் சொல்லப்படாமல் விட்டிருக்கலாம்.

4) எனது பேரனுக்கு சம்பவ சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனது பேரன் 10 வருடங்களாக வண்டி ஓட்டி வருகிறார் மெதுவாகத்தான் வண்டி ஓட்டி செல்வார். சம்பவ சமயத்தில் எனக்கு 70 வயது என்றும் என்னால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து வர இயலாது என்று சொன்னால்

சரியல்ல. எனது பேரன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் ஆட்கள் நிறைய இருப்பார்கள் என்றால் சரிதான் அந்த நேரத்தில் யாரும் இல்லை எனது சத்தம் கேட்டுதான் ஆட்கள் வந்தார்கள்.

5) சம்பவ இடத்தில் உள்ள மாட்டு ஆஸ்பத்திரி வடக்கு நோக்கி உள்ளது. எனக்கு இரண்டு கைமுட்டியிலும் கால் முட்டியிலும் நெற்றியிலும் எனக்கு காயம் ஏற்பட்டது. எனது பேரனுக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் நான் மயங்கி விட்டேன் அதனால் எனக்கு தெரியவில்லை. காயம் பட்ட பிறகு எதிரி ஓட்டி வந்த வாகனத்திலேயே மருத்துவமனைக்கு சென்றோம். எதிரி யார் என்று எனக்கு அடையாளம் தெரியாது என்றால் சரிதான்.

6) காயம்பட்ட என்னை மருத்துவர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். சாட்சிகள் பிரபாகரன் ஆறுமுகம் ஆகியோர் எங்களது தகவல் கேள்விப்பட்டு வந்தார்களா என்றால் இல்லை எனது சத்தம் கேட்டு அங்கு வந்தார்கள். அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் மூன்று அடிக்கு வேகத்தடை உள்ளது என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வாகனத்தை வேகமாக ஓட்ட முடியாது என்றால் எனது பேரன் மெதுவாகத்தான் ஓட்டி வந்தார் எதிரிதான் வேகமாக ஒட்டி வந்தார்.

7) விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதன் நிறம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விபத்து சம்பந்தமாக விசாரித்தார்கள். எனது பேரனுக்கு சம்பவ சமயத்தில் இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் அதனால் சாலை விதிகள் தெரியாமல் எனது பேரன் அதிவேகமாக கவனக்குறைவாக வாகனத்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

8) எதிரி மேற்கிலிருந்து பெரியாண்டவர் கோவில் திசையில் இருந்து வந்தார். எனது பேரன் கொடுத்த புகாருக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.11 18:27:20 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**